# 17. WATER SUPPLY

## 17.2 ஊராட்சிகளில் வீட்டுக் குடிநீர் இணைப்பு வழங்குதல்

ஊரக வளர்ச்சி (கு.வ.1) துறை

அரசாணை (நிலை) எண். 260 நாள் : 09.12.1998

படிக்க :

தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரிய மேலாண்மை இயக்குநரின் கடித எண். 1000/உ.பொ.7/பி.எம்./98–1/நாள்–07.09.1998.

**ஆணை**

தமிழக அரசின் சமீபத்திய கொள்கை முடிவின்படி, இம்மாநிலத்திலுள்ள அனைத்து அரசு குடியிருப்புகளுக்கும் வீட்டு குழாய் இணைப்பு வழங்குவதற்கும், தமிழ்நாட்டிலுள்ள 66,631 ஊரக குடியிருப்புகளில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் (40 LPCD) வழங்கும் திட்டத்தின் கீழ், ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் 32,274 ஊரக குடியிருப்புகளைத் தவிர மீதமுள்ள ஊரக குடியிருப்புகளுக்கு குழாய் இணைப்பு தர தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். மேலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய குழுமக் கூட்டம் மற்றும் டானிடா வழி நடத்தும் குழுவிலும், இத்திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், பின்வருமாறு அரசுக்கு பரிந்துரைகளை செய்துள்ளார்.

1. எங்கெங்கு நீராதாரங்கள் உள்ளனவோ அங்கு 30 விழுக்காடு வரை வீடுகளுக்கு குழாய் இணைப்பு வழங்க ஏதுவாக புதிய ஊரக குடிநீர்த் திட்டங்களை வடிவமைக்கலாம்.
2. ஊரக குடிநீர் திட்டங்களில் வீடுகளுக்கு குழாய் இணைப்புகள் வழங்கும்போது தற்போது உள்ள நடைமுறையை மாற்றி நாளொன்றிற்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் குடிநீர் என்ற அளவிலும் மற்ற இணைப்புகளுக்கு நாளொன்றிற்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் என்ற அளவிலும் குடிநீர் வழங்க விதிமுறைகளை மாற்றியமைக்கலாம்.
3. உள்ளாட்சி அமைப்புகள் வீடுகளுக்கு குழாய் இணைப்புகள் வழங்கும்போது ஒரு முறை முன்வைப்பு தொகையாக குறைந்த அளவாக ரூ.1500/–ம் மற்றும் மாதாந்திர கட்டணமாக, குறைந்த அளவாக ரூ.25/–ம் வசூலிக்க வேண்டியிருக்கலாம்.

2.தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநரின் பரிந்துரைகளை அரசு பல்வேறு நிலைகளில் நன்கு ஆராய்ந்து தமிழகத்தில் உள்ள ஊராட்சிகளில் அமைந்துள்ள வீடுகளுக்கு பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் குழாய்கள் மூலம் குடிநீர் இணைப்புகள் கொடுக்க அரசாணை வெளியிடுகிறது.

அ. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அனைத்து ஊரக குடியிருப்புகளையும் அவற்றிற்கு தேவைப்படும் வீட்டுக் குழாய் இணைப்புகள் குறித்தும் ஒரு கணக்கெடுப்பு செய்ய வேண்டும். இந்த அறிக்கை மாவட்ட ஆட்சியாளர்கள் மூலமாக கிராம ஊராட்சிகளுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும்.

ஆ. கிராம ஊராட்சிகள் குடிநீர் இணைப்பு முன் கட்டணம் மற்றும் வரியை பெற்று வீடுகளுக்கான குழாய் இணைப்புகளை முறைப்படுத்தலாம் / புதிய இணைப்புகள் வழங்கலாம்.

இ. ஒவ்வொரு வீட்டுக் குழாய் இணைப்பிற்கும் ரூ.1000/–ஐ முன்வைப்புத் தொகையாக வசூலிக்க வேண்டும். குழாய்களின் மதிப்பு மற்றும் அதை பொருத்துவதற்கான செலவினத்தை வீட்டு உரிமையாளர்/ வாடகைதாரர் செலுத்த வேண்டும். மேலும் இப்பணிகளை அந்தந்த பயன்பெறுவோர்களே நேரடையாக செய்து கொள்ள அனுமதிக்கலாம். எனினும் இதற்குரிய இணைப்பை கிராம ஊராட்சிகள் கொடுக்கும் போது அனுமதிக்கப்பட்ட பரிமாணத்தில் குழாய் உள்ளதா என சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

ஈ. வீட்டுக் குழாய் இணைப்பிற்கு, குடிநீர் கட்டணமாக மாதாந்திரக் கட்டணம் ரூ.30/– என நிர்ணயிக்கப்படுகிறது.

உ. ஏற்கனவே உள்ள வீட்டு குழாய் இணைப்புகளுக்கு மேல் கூடுதல் இணைப்பு வழங்கள் வேண்டுமென்றால் கிராம ஊராட்சிகள் அதனை ஆராய்ந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளரின் முன் அனுமதியைப் பெற வேண்டும்.

ஊ. கிராம ஊராட்சிகள் அதன் மன்ற தீர்மானத்துடன் அனுப்பப்படும் கோரிக்கைகளை, தமிழ்நாடு குடிநீர் வடிகால்

வாரிய செயற்பொறியாளர், கூடுதல் நீராதாரம் மற்றும் நீராதார திட்டங்களை மேம்படுத்துதல் மற்றும் திட்ட மதிப்பீடு ஆகியவற்றை ஆய்வு செய்து, அவை பெறப்பட்ட 90 நாட்களுக்குள் அதன் விபரங்களை கிராம ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும்.

எ. கிராம ஊராட்சிகள் தங்களுடைய சொந்த நிதியிலிருந்து இக்கூடுதல் பணிகளை மேற்கொள்ள வேண்டும். கிராம ஊராட்சிகள் விரும்பினால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக இப்பணிகளை செயல்படுத்தலாம்.

ஏ. இக்கூடுதல் பணிகள் முடிவுற்றவுடன், கிராம ஊராட்சிகள் புதிய வீட்டுக்குழாய் இணைப்புகள் கொடுக்க அனுமதிக்கலாம்.

ஐ. குறிப்பாக பொருளாதார நிலையில் பின் தங்கிய மக்கள் வசிக்கும் இடங்களில் உள்ள குழாய்களிலிருந்து அவர்களின் குடிநீர் தேவைகள் பாதிக்கும் வகையில், வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு கொடுக்கப்படக் கூடாது.

ஒ. அனுமதிக்கப்பட்ட அளவிற்கு மேலாக பொதுக் குழாய்களிலிருந்து வீட்டுக் குழாய் இணைப்பு கொடுக்கப்பட்டு, அது பொது குடிநீர் விநியோகத்திற்கு இடையூறாக அமைந்தால், அது போன்ற இணைப்புகளை சட்ட விரோதமானது என அறிவித்து அவற்றை துண்டிப்பதற்கு மாவட்ட ஆட்சியாளர்கள் ஊராட்சிகளுக்கு ஆணை பிறப்பிக்கலாம்.

ஓ. புதிய திட்டங்களை பொறுத்தமட்டில், ஊரக குடியிருப்புகளில் வீட்டு இணைப்புகளுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட தேவைகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஔ.இது போன்ற குழாய் இணைப்பு அனுமதி மூலம் பெறும் வருமானத்தை குடிநீர் திட்டங்களுக்கான மின் கட்டணம் மற்றும் இது போன்ற அனைத்து குடிநீர் பராமரிப்புப் பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது. மேலும் இது சம்பந்தமான கணக்குகள் மற்றும் பதிவேடுகளை ஊராட்சிகள் தனியாக பராமரிக்கும்படி கேட்டுக் கொள்ளலாம்.

3) இந்த அரசாணைத் திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அ.சா.கு.நாள்–4.12.1998 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அ.சா.கு.நாள்–4.12.1998 மற்றும் நிதித் துறை அ.சா.கு எண். 5014/எப்.எஸ்./பி/98/ நாள்–06.12.1998ன் இசைவின் பேரில் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்